**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 179/2019</u>**

நாள் 16.02.2026

DW3 – N.C.மகேந்திரன்

த/பெ – சின்னச்சாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of February 2026)**

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் B.Tech வரை படித்துள்ளேன். நானும், எனது அப்பா 4-ம் பிரதிவாதியும் கூட்டுக்குடும்பமாக தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். என்னுடன் சீதா என்ற சகோதரியும் உள்ளார். எங்களது சொந்த ஊர் நல்லிகவுண்டன்பாளையம். எனது அப்பா 4-ம் பிரதிவாதி 2011-ம் ஆண்டில் விவசாயம் செய்து வந்தார். எனது அப்பாவிற்கு 1 முதல் 3 பிரதிவாதிகளை 2010-ம் ஆண்டில் தான் தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்தை நான் வாங்குவதற்கு முன்பாக வழக்கறிஞரிடம் எழுத்துப்பூர்வமான சட்டக்கருத்துரை வாங்கினேனா? என்றால் இல்லை. இந்த முதல் விசாரணை வாக்குமூலத்தை நான் எனது அப்பா 4-ம் பிரதிவாதிக்கும் சேர்த்து தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2014-ம் ஆண்டில் தாவா சொத்தின் வழிகாட்டி மதிப்பாக ரூ.8,00,000/- இருந்தது என்றும், ஆனால், எனது அப்பா 4-ம் பிரதிவாதி ரூ.4,00,000/-க்கு 13.02.2014-ம் தேதியில் ஒரு பதிவு கிரைய ஒப்பந்த பத்திரத்தை பெரியசாமி என்பவருக்கு எழுதி கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். அந்த பெரியசாமி பச்சாபாளையத்தை சேர்ந்தவர். அந்த பச்சாபாளையம், நல்லிகவுண்டன்பாளையத்திற்கு பக்கத்து ஊர் ஆகும். தாவா சொத்திற்கு வில்லங்க படுத்த வேண்டும் என்பதற்காக வேண்டி தான்

2. எனது அப்பா 4–ம் பிரதிவாதி அந்த பெரியசாமி பெயரில் மேற்படி கிரைய ஒப்பந்தத்தை பெயரளவில் ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. அந்த கிரைய ஒப்பந்தம் உண்மையாக ஏற்படுத்தியிருந்தால் 3 மாதம் மட்டும் தான் கால அவகாசம் குறிப்பிட்டு எழுதியிருப்பார்கள் என்றும், அது பெயரளவில் ஏற்பட்டதால் தான் 3 வருட கால அவகாசம் குறிப்பிட்டு கிரைய ஒப்பந்தத்தை எழுதியுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. அந்த 3 வருட கால அவகாசம் முடிவுறும் தருவாயில் அந்த கிரைய ஒப்பந்தத்தை கால நீட்டிப்பும் எனது அப்பா செய்துள்ளார் என்றால் சரியல்ல. பின்னிட்டு அந்த பெரியசாமி பெயரில் ஏற்படுத்திய கிரைய ஒப்பந்தத்தை எனது அப்பா ரத்து செய்து விட்டார் என்றால் சரிதான். பெரியசாமி பெயரில் ஏற்பட்டுள்ள வா.சா.ஆ.10 கிரைய ஒப்பந்தத்தில் கிரைய தொகையாக ரூ.4,00,000/– என்றும், கிரைய முன் பணத்தொகையாக ரூ.3,00,000/– கொடுக்கப்பட்டதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தம் குறித்த விபரத்தை வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எனது அப்பா எழுத்து மூலமாக ஏதேனும் தெரிவித்தாரா? என்றால் இல்லை. அதேபோல், அந்த ஒப்பந்தத்தை கால நீட்டிப்பு செய்தது குறித்தும், அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்தது குறித்தும் எனது அப்பா அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால், அது எனக்கு தெரியாது. அவ்வாறு கால நீட்டிப்பு செய்வதற்கும், அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கும் சரியான காரணம் எதுவும் அந்த ஆவணங்களில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. காலநீட்டிப்பு செய்து கொடுக்க கேட்டு பெரியசாமி எனது அப்பா 4–ம் பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு ஏதேனும் கொடுத்தாரா? என்றால் இல்லை. அதனால், எனது அப்பா 4–ம் பிரதிவாதி தாவா சொத்தை பொறுத்து வில்லங்கம் ஏற்படுத்துவதற்காக வேண்டி தான் பெயரளவில்

தான் பெரியசாமி என்பவர் பெயரில் ஆவணங்களை ஏற்படுத்தி கொண்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

3. நான் தாவா சொத்தை பொறுத்து வங்கியில் கடன் பெறும் போது அந்த கடன் விண்ணப்பத்தில் சொத்தை பொறுத்து எந்தவொரு வழக்கும் நிலுவையில் இல்லை என்ற ஒரு காலம் இருக்கும் என்றால் அது எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கு இருப்பதை மறைத்து தான் வங்கியை ஏமாற்றி கடன் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாவா சொத்தை பொறுத்து வில்லங்கம் ஏற்படுத்த வேண்டி தான் எனது பெயரில் வங்கியில் அடமான கடன் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எங்களுடைய எதிர்வாதம் பொய் என்பதால் தான் வாடகைதாரர்களை பொறுத்து எங்களுடைய சாட்சியம் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் மகாலிங்கம், பாலசுப்பிரமணியம் ஆகிய இருவரும் வாடகைக்கு இருந்து வருகிறார்கள் என்றும், வா.சா.2 மற்றும் வா.சா.3 சாட்சிகளாக வாதி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த மகாலிங்கம் மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகிய இருவரும் 1 முதல் 3 பிரதிவாதிகளின் கீழ் தான் தாவா சொத்தில் வாடகைதாரராக இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, எங்களிடம் தான் வாடகைதாரராக இருந்து வருகிறார்கள். நான் அவர்களிடம் மாத வாடகையை வாங்கி வருவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது அப்பா 4-ம் பிரதிவாதி 1 முதல் 3 பிரதிவாதியையும் மற்றும் வாதியையும் ஏமாற்றி தான் பொது அதிகார பத்திரத்தை எழுதி வாங்கிக்கொண்டுள்ளார் என்றும், அதே நாளில் தான் ரசீதும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.9 முதல் பி.வா.சா.ஆ.16 வரையிலான ஆவணங்கள் இந்த வழக்கிற்கு பின்னிட்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள்

என்றால் சரியல்ல. எனது அப்பா 2014–ல் விற்ற சொத்திற்கு 2011–ம் ஆண்டிலேயே பணம் கொடுக்கப்பட்டதாக ரசீது மோசடியாக ஏற்படுத்திக்கொண்டுள்ளார் என்றால் சரியல்ல.

4. எனது அப்பா பெயருக்கு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்த தெய்வகுஞ்சாரம் இறக்கும் தருவாயில் இருந்ததை அறிந்து தான் எனது பெயரில் பெயரளவில் கிரைய ஆவணத்தை ஏற்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது அப்பா தாவா சொத்தை பொறுத்து வாடகை ஒப்பந்த பத்திரம் எழுதி கொள்வதாக சொல்லி தான் அழைத்துசென்று பொது அதிகார பத்திரமாக ஏமாற்றி எழுதி வாங்கி கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. அவ்வாறு சொத்தை நான் உண்மையிலேயே கிரையம் வாங்கியிருந்தால் சொத்திற்குரிய கிரைய தொகையை நான் வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதியின் வங்கி கணக்கிற்கோ அல்லது காசோலை மூலமாக கொடுத்திருப்பேன் என்றும், அவ்வாறு நான் எந்த தொகையும் கொடுக்காத நிலையில் தான் பெயரளவில் எனது பெயரில் கிரைய ஆவணத்தை மோசடியாக ஏற்படுத்திக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது மனைவி பெயர் பிரியா. எனது மனைவியின் ஊர் ஆயிகவுண்டன்பாளையம் கிராமம், ஊத்துக்குளி தாலுகா, திருப்பூர் மாவட்டம் ஆகும். எனது கடையில் எத்தனை பேர் வேலை செய்கிறார்கள் என்றால், நானும், எனது மனைவி ஆகிய இருவர் மட்டும் தான் கடையை பார்த்து கொண்டு வருகிறோம். என்னிடம் காட்டப்படும் 09.10.2025–ம் தேதியிட்ட பதிவு பெறா வாடகை ஒப்பந்த பத்திரத்தில் சாட்சியாக உள்ள பிரியா என்ற கையெழுத்து எனது மனைவியினுடையது என்றால் இல்லை. அந்த கையெழுத்து எனது மனைவி பிரியாவின் கையெழுத்து தான் என்றும், அதை ஒத்துக்கொண்டார் இந்த வழக்கில் எனக்கு

விரோதமாகிவிடும் என்பதற்காக வேண்டி தான் அந்த கையெழுத்து எனது மனைவியின் கையெழுத்து இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த வாடகை ஒப்பந்த பத்திரத்தில் உள்ள 2–வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ள பூபதி என்பவர் எனது கடையில் வேலை பார்ப்பவர் என்றால் சரியல்ல. தாவா சொத்தை அபகரிக்க வேண்டி தான் நானும், எனது அப்பாவும் கூட்டு சதி செய்து மோசடியாக ஆவணத்தை ஏற்படுத்தி கொண்டு எதிர்வழக்காடி வருகிறோம் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை பொறுத்து வங்கிக்கு எழுதி கொடுத்து அடமான பத்திரம் வாதியையும், 1 முதல் 3 பிரதிவாதிகளையும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.02.16 15:11:06 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**